2015 செப்டம்பர் 23]

அது திறக்கப்படும் என்று தெரிவித்தீர்கள். அது இந்த ஆண்டே திறக்கப்படுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியிலே, துணை மின் நிலையம் கட்டி முடிக்கப்படும் தருவாயில் இருக்கிறது. இன்னும் ஒரு சில பகுதிகளில் மட்டும் வேலைகள் இருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்தவுடன், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால், காணொளிக்காட்சி மூலமாக அந்தத் துணை மின் நிலையம் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

330—

புறவழிச் சாலை

***53908 திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை–சென்னை நான்கு வழிச்சாலையிலுள்ள ராஜகெம்பீரத்தில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை கிழக்கு தொகுதி, ஒத்தக்கடையில், மதுரை–சென்னை நான்கு வழிச்சாலையில், ராஜகெம்பீரத்தில் தற்சமயம் புறவழிச் சாலை அமைக்க அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2015 செப்டம்பர் 23

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

முற்பகல் 10—25

திரு. கா. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை—சென்னை—தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் அமைந்துள்ள ராஜகெம்பீரத்தில் உள்ள சாலை முக்கியமான சாலை. அந்தச் சாலை வழியாகத்தான் 108 தலங்களில் ஒன்றான காளமேகப் பெருமாள் கோயிலுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. சக்கரத்தாழ்வார் கோயிலுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. மாணிக்கவாசகர் பிறந்த இடத்திற்கும், மீனாட்சி அம்மன் கோயில் கட்டுவதற்கு முன்னாலே கட்டப்பட்ட வேதநாயகி அம்மன் கோயிலுக்குச் செல்வதற்கும், மிகவும் பிரசித்தி பெற்ற முடக்கு சனீஸ்வரர் கோயிலுக்குச் செல்வதற்கும் அந்தச் சாலை பயன்படுகிறது. கொட்டாம்பட்டியிலிருந்து திருச்சிக்கும், கன்னியாகுமரியிலிருந்து மதுரை நகரத்திற்கும் செல்பவர்கள் ஒத்தக்கடை வழியே செல்வதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகின்றது. மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, உயர் நீதிமன்றம், இராஜாஜி மருத்துவமனை போன்ற பகுதிகளுக்குச் செல்பவர்களும் ஒத்தக்கடை வழியே செல்வதால் போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, புறவழிச் சாலை அமைத்துக் கொடுத்தால், நிச்சயமாக அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும். ஏழைகளின் இதயம், தமிழினத்தின் காவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எதைக் கேட்டாலும் இல்லையென்ற முறையில் செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், இந்த பக்தர்களுக்காக எதையும் செய்யக்கூடியவர்கள். எனவே, புறவழிச் சாலையை அமைத்துக் கொடுத்தால் வசதியாக இருக்கும் என்ற காரணத்தால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, இதை அமைத்துத் தருவதற்கு வழி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள கடச்சனேந்தல்–திருவாதவூர் வரையிலான 17.80 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலையில் கி.மீ. 4/2–ல் ராஜகெம்பீரம் கிராமம் உள்ளது. திருச்சியிலிருந்து விராலிமலை, மேலூர், மதுரை, அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி வரை செல்லும் மேற்கண்ட சாலை, மாநில நெடுஞ்சாலை எண் 103–ல் ஒத்தக்கடையிலிருந்து பிரிந்து செல்கிறது. ராஜகெம்பீரத்தைச் சுற்றி சென்னை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிச் சாலையாக அமைந்துள்ளதாலும், இச்சாலையை இணைக்கும் வகையில் மதுரை சுற்றுச் சாலை அமையப்பெற்றுள்ளதாலும், ராஜகெம்பீரத்தில் தற்சமயம் புறவழிச் சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள்.*

திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் பேரூராட்சியில் நீண்டகாலத்திற்கு முன்பு நெடுந்தூரத்திற்கு போடப்பட்ட புறவழிச் சாலை, பேருந்து சென்றால் எதிரே வருகின்ற மோட்டார் பைக்கூட நுழைந்து வரமுடியாத அளவிற்கு மிகவும் குறுகலாக உள்ளது. அதை துணைக் கேள்வியாகக் கேட்பதோடு மட்டுமல்லாமல், ஒரு வேண்டுகோளாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அந்த நெடிய சாலையை இரண்டாகப் பிரித்து, முதுகுளத்தூர்–கடலாடி சாலையோடு கமுதி–முதுகுளத்தூர் சாலையை இணைக்க வேண்டுமானால் நான்கு ஃபர்லாங் தூரம்தான் வரும். அங்கு எந்தப் பாலமும் கிடையாது. இந்த அவசர, அவசியமான சாலையை குறைந்த செலவில் சீரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகிறபோது, அதைப் பார்வையிட வேண்டும், அங்கு உயர் அதிகாரிகளை அனுப்பி வைத்து, அதற்கான ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வதோடு, பசும்பொன் தேவர் திருமகனார் அவர்களுடைய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு கேள்வியோடு உட்காருங்கள். மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை சம்பந்தமான வழக்கு நீதிமன்றத்திலே இருந்து கொண்டிருக்கின்றது. நிலத்தைக் கையகப்படுத்துகின்ற நேர்வில் நிலத்தின் உரிமையாளர் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலே, நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றத்தில் உள்ள வழக்கு முடிந்த பிறகு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருத்துறைப்பூண்டி வளர்ந்து வரக்கூடிய சிறிய நகரம் ஆகும். இந்த நகரத்தின் சாலை குறுகிய சாலையாக இருக்கிற காரணத்தாலே, திருத்துறைப்பூண்டி—முத்துப்பேட்டை பகுதியிலிருந்தும், வேதாரண்யம் பகுதியிலிருந்தும் வரக்கூடிய வாகனங்கள், திருத்துறைப்பூண்டி பகுதியிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாக வரக்கூடிய லாரிகள் எல்லாம் அந்தச் சாலையின் வழியாக வருகிறபோது, மிகப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. அந்த அடிப்படையில், பழைய பேருந்து நிலையம் அருகில் போக்குவரத்துத் தடை ஏற்பட்டால், மன்னார்குடி, பட்டுக்கோட்டை, வேதாரண்யம், தலைஞாயிறு மற்றும் நாகை போன்ற இடங்களுக்குப் பேருந்துகளோ, லாரிகளோ செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. நாகை சாலையையும், திருவாரூர் சாலையையும் இணைக்கக்கூடிய புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதை உடனே தொடங்குவதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகருக்கு 2.460 கிலோ மீட்டர் நீளத்தில் புறவழிச் சாலை அமைப்பதற்கு ரூ.21.62 இலட்சம் செலவில் நில எடுப்புப் பணி மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, நிருவாக அங்கீகாரம் வழங்கப்பட்டது. இப்புறவழிச் சாலை மயிலாடுதுறை-திருத்துறைப்பூண்டி சாலை 66/6 கி.மீ. வேலூரில் தொடங்கி, வேளாங்கண்ணி–திருத்துறைப்பூண்டி சாலை 39/2 கி.மீ.-ல் சேரும் வகையில் நேர்பாடு அமைக்கப்பட்டுள்ளது. புறவழிச் சாலை அமைக்கும் பணியில் கி.மீ.-லிருந்து 2/460 வரையில் உள்ள பகுதிகளில் 3.54.37 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. இப்புறவழிச் சாலை, 0/0 கி.மீ.–லிருந்து கி.மீ. வரையிலான பகுதிகளில் 0/2.97.87 ஹெக்டேர் நிலம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கோயில் நிலமாக மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. இந்நிலத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர், திருவாரூர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு 3 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் என்ற நில மதிப்பில் 150 சதவிகிதத் தொகையான 36 இலட்சத்து 10 ஆயிரத்து 80 ரூபாயை வழங்க சம்மதம் கேட்டு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையிடம் முன்நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது. ஆனால், ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை அவர்கள், மேற்காணும் நிலத்திற்கு இழப்பீடாக கிட்டத்தட்ட 30 கோடியே 70 இலட்சத்து 8 ஆயிரத்து 520 ரூபாயை வழங்க வேண்டுமென தெரிவித்ததைத் தொடர்ந்து, 6–5–2015 அன்று தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, அதன்படி மாவட்ட வருவாய் அலுவலரால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பைவிட 250 சதவிகிதம் அதிகமாக வழங்க வேண்டுமென்று இடைக்கால இழப்பீடு தொகையை செலுத்தி, முன்நுழைவு அனுமதி பெற்று, வேலையைத் தொடங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 250 சதவிகித இடைக்கால இழப்பீட்டுத் தொகையான 60 இலட்சத்து 16 ஆயிரத்து 800 ரூபாய் செலுத்தி, முன்நுழைவு அனுமதி வழங்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்தப் பணிகளெல்லாம் முடிந்தவுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.